

தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (12.6.2024) நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் தலைமையில், வருகின்ற சட்டப்பேரவைக் கூட்டத் தொடரினை முன்னிட்டு, நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சார்பில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய திட்டங்கள் குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையர் மரு.ஜெ.ராதாகிருஷ்ணன்,தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவன தலைவர்/ அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், முனைவர்.எஸ்.விஜயகுமார், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு கழகத்தின் நிர்வாக இயக்குநர், ஹனிஷ் சப்ரா, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர், டாக்டர்.டி.ஜி.வினய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர், வி.தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகளின் இயக்குநர், கிரண் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர், எஸ்.சிவராச, மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கோவை கொடிசியா மைதானத்தில், தி.மு.க. சார்பில், வருகிற 15.6.2024 அன்று நடைபெற உள்ள முப்பெரும் விழா ஏற்பாடுகளை, தமிழ்நாடு பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தமிழ்நாடு வீட்டுவசதித்துறை, நகர்ப்புற வளர்ச்சித் துறை மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி ஆகியோர் பார்வையிட்டனர். உடன் கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, கோவை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் தளபதி முருகேசன், ஈஸ்வரசாமி எம்.பி., தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்தர், கோவை மாநகராட்சி மேயர் கல்பனா ஆனந்த், கழக மாநில தொழிலாளர் அணி துணைச் செயலாளர் lpf தமிழ்செல்வன், கோவை மாநகராட்சி கல்விக்குழு தலைவர் மாலதி, வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் அசோக் ஆறுக்குட்டி, பீளமேடு பகுதி1 செயலாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன், சிங்காநல்லூர் பகுதி1 செயலாளர் எஸ்.எம்.சாமி, வழக்கறிஞர் சரவணன்,மனோஜ்முத்துசாமி, கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### லெம்பலக்குடி கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில் 257 பயனாளிகளுக்கு

# ரூ.1.54 கோடி மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் எஸ்.ரகுபதி வழங்கி சிறப்புரை!

*புதுக்கோட்டை, ஜூன் 14 -*

புதுக்கோட்டை மாவட்டம், திருமயம் வட்டம், லெம்பலக்குடி வருவாய் கிராமத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் 12.06.2024 அன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி, மாவட்ட ஆட்சித் தலைவர் ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.



இம்முகாமில், வருவாய்த் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, தோட்டக்கலைத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில், 257 பயனாளிகளுக்கு ரூ.1,53,98,930 மதிப்பீட்டில் பல்வேறு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார். அப்போது அமைச்சர் எஸ்.ரகுபதி பேசியதாவது;

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் குறைகளை மனுக்களாக பெற்று தீர்வு காணும் நோக்கத்தில் மாதந்தோறும் ஒரு குக்கிராமத்தை தேர்வு செய்து, மக்கள் தொடர்பு முகாம் நடத்திட அறிவுறுத்தியுள்ளார்கள். அதன்படி திருமயம் வட்டம், லெம்பலக்குடி வருவாய் கிராமத்தில் மக்கள் தொடர்பு முகாம் நடத்தப்பட்டது.

இம்முகாமில், தமிழக அரசு பல்வேறு அரசுத் துறைகளின் வாயிலாக மேற்கொள்ளப்படும் மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்தும், அத்திட்டங்கள் மூலம் பயன்பெறுவதற்கான வழிமுறைகள் குறித்தும் தொடர்புடைய அலுவலர்களால் பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது. மேலும் இம்முகாமில் மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, பொதுசுகாதாரத் துறை, வேளாண் பொறியியல் துறை, வேளாண்மைத் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் சார்பில் கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது. இக்கண்காட்சியினை பொதுமக்கள் அனைவரும் பார்வையிட்டு, தமிழக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்களை அறிந்து கொண்டு பயன்பெற வேண்டும்.

மேலும் பொதுமக்கள் அனைவரும் அளிக்கும் மனுக்கள் மீது மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு விரைவில் தீர்வு காணப்படும்.

அரசின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்களின்கீழ் பயன்பெறுவதற்கு பொதுமக்கள் அனைவரும் கோரிக்கை மனுக்களை அளித்து பயன்பெறலாம். இம்மனுக்களின் மீது துறை சார்ந்த அலுவலர்களால் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதை உறுதி செய்யும் வகையில் மாவட்ட ஆட்சியரகத்தில் கண்காணிப்பு அலுவலர் நியமிக்கப்பட்டு, பொதுமக்களின் கோரிக்கை மனுவின் நிலை குறித்து அவ்வப்போது ஆய்வு செய்யப் பட்டு வருகிறது.

எனவே பொதுமக்கள் அனைவரும் இதுபோன்று நடைபெறும் முகாம்களை உரிய முறையில் பயன்படுத்திக்கொண்டு தங்களது அடிப்படை தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி பேசினார்.

இம்முகாமில், மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) ஆர்.ரம்யாதேவி , புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் பா.ஐஸ்வர்யா, இணை இயக்குநர் (வேளாண்மை) (பொ) வெ.ம.ரவிச்சந்திரன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ஜீவா, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் ஜி.அமீர்பாஷா, மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் க.ஸ்ரீதர், மாவட்ட சமூகநல அலுவலர் க.ந.கோகுலப்பிரியா, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்ட அலுவலர் புவனேஸ்வரி, வட்டாட்சியர் புவியரசன், ஊராட்சிமன்றத் தலைவர் பாலு, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அனைத்துத் துறை அரசு அலுவலர்கள் மற்றும் பயனாளிகள் கலந்துகொண்டனர்.

### அரியலூர் மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர் !

# ஜூன் 15ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

## மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் சா.சி.சிவசங்கர் அறிக்கை!

*அரியலூர், ஜூன் 14 -*

ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் “முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்” அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டுமென மாவட்டக் கழக செயலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு : -



வருகின்ற ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையில் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்துக் கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் “முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்” அரியலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

அதுசமயம், அக்கூட்டத்தில் அரியலூர் மாவட்டத்தைச் சேர்ந்த, முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்டக் கழக நிர்வாகி கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர,பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள், ஒன்றிய பெருந் தலைவர்கள், நகர்மன்ற தலைவர்கள், துணை தலைவர்கள், பேரூராட்சி மன்ற தலைவர்கள், துணைத் தலைவர்கள் மண்டலக் குழு நிலைக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக இளைஞரணி, மாணவரணி, மகளிரணி, மகளிர் தொண்டரணி, வழக்கறிஞர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, தொண்டரணி, தொழிலாளர் அணி, மீனவரணி, நெசவாளர் அணி, பொறியாளர் அணி, மருத்துவர் அணி, வர்த்தகர் அணி, ஆதிதிராவிடர் நலக்குழு அணி, சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு, தகவல் தொழில்நுட்ப பிரிவு அணி, சுற்றுச்சூழல் அணி, அயலக அணி , அமைப்புச்சார ஓட்டுநர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள். வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடி கள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்ட கழகச் செயலாளர், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டார்.

### ஜூன் 15 ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

# சேலம் மேற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி எம்.பி. அறிக்கை!

*சேலம், ஜூன் 14 -*

சேலம் மேற்கு மாவட்ட கழக செயலாளர் டி.எம். செல்வகணபதிவிடுத்துள்ள அறிக்கை வருமாறு:

ஜூன் 15ம் தேதி சனிக் கிழமை மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்துக்கொள்ளும் முப்பெரும் விழா பொதுக் கூட்டத்தில்” சேலம் மேற்கு மாவட்ட திமுக சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பொருந்திரளாக கலந்துக்கொள்ள வேண்டுமென மாவட்ட தி.மு.க. செயலாளர்டி.எம். செல்வகணபதிவிடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு :



வருகிற ஜூன் 15ம் தேதி சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா,

சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற தமிழ்நாடு முதல்மைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்” சேலம் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ள வேண்டும்.

அது சமயம், இக்கூட்டத்தில் சேலம் மேற்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், இந்நாள், முன்னாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள்,

ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழகத்தின் துணை அமைப்புகளான இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி, விவசாய அணி, விவசாய தொழிலாளர் அணி, மருத்துவ அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, நெசவாளர் அணி, தொண்டர் அணி, வர்த்தகர் அணி, இலக்கிய அணி, கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, மீனவர் அணி, சிறுபான்மை நலக்குழு உரிமைப் பிரிவு,

தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச் சூழல் அணி, தொழிலாளர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி, அமைப்பு சாரா ஓட்டுநர் அணி, அயலக அணி, ஆதி திராவிடர் நலக்குழு ஆகிய அணிகளின் நிர்வாகிகள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் (பி.எல்.ஏ.2), பூத்க மிட்டி உறுப்பினர்கள் (பி.எல்.சி) கழக தோழர்கள், கழக முன்னோடிகள் ஆகிய அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் டி.எம்.செல்வகணபதி தெரிவித்துள்ளார்.




கள்ளக்குறிச்சி மாவட்டம் ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதி வாணாபுரம் பகன்டை கூட்டு சாலையில் அ.தி.மு.க., பா.ஜ.க., பா.ம.க., தே.மு.தி.க. உள்ளிட்ட பல்வேறு கட்சியினர் கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் வசந்த்ம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர், அருகில் திருக்கோவிலூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் வி.கிருஷ்ணமூர்த்தி மற்றும் மேற்கு ஒன்றிய கழக நிர்வாகிகள் எஸ்.சிவக்குமார் டி.ராமதாஸ் பி.குருமூர்த்தி, நடராஜ், கார்த்தி ஆகியோர் உடன் உள்ளனர்.

### தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாக கலந்து கொள்வீர் !

# ஜூன் 15ஆம் தேதி கோவையில் முப்பெரும் விழா!

## மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி அறிக்கை!

*தருமபுரி, ஜூன் 14 -*

தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகத்தினருக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அண்ணன் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்துக் கொள்ளும் “முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்” தருமபுரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பெருந்திரளாக கலந்துக்கொள்ள வேண்டுமென மாவட்ட கழக செயலாளர் தடங்கம் பெ.சுப்ரமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.



வருகின்ற ஜூன் 15ம் தேதி மாலை 4.00 மணியளவில் கோயம்புத்தூர் கொடிசியா மைதானத்தில் மாண்புமிகு தமிழநாடு முதலமைச்சர், கழக தலைவர் அண்ணன் தளபதி அவர்களின் தலைமையிலும் மற்றும் கூட்டணி கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளும், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, நாற்பது நாடாளுமன்றத் தொகுதிகளிலும் வெற்றியளித்த தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் விழா, சீர்மிகு வெற்றிக்கு கழகத்தை வழிநடத்திச் சென்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களுக்குப் பாராட்டு விழா என நடைபெறும் “முப்பெரும் விழா பொதுக்கூட்டத்தில்” தருமபுரி கிழக்கு மாவட்ட திமுகழகம் சார்பில் பெருந்திரளாக கலந்துகொள்ள வேண்டும். அதுசமயம், இக்கூட்டத்தில் தருமபுரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த, மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர், வார்டு, கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் மாவட்ட ஊராட்சிக்குழு, ஒன்றியக்குழு உறுப்பினர்கள், மற்றும் நகராட்சி, பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக சார்பு அணிகள் மற்றும் தொழிலாளர் முன்னேற்றச்சங்கம் ஆகிய அணிகளின் நிர்வாகிகள். வாக்குச்சாவடி முகவர்கள் மற்றும் கழக முன்னோடிகள், கழக தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் தடங்கம் பெ. சுப்ரமணி அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.



கோவை கொடீசியா மைதானத்தில் வருகிற 15.6.2024 மாலை திமுகழகம் சார்பில் நடைபெற உள்ள முப்பெரும் விழா ஏற்பாடுகள் குறித்து நடைபெற்ற, ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள்,பூத் கமிட்டி நிர்வாகிகள் கூட்டத்தில், கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா. கார்த்திக் முப்பெரும் விழா ஏற்பாடுகளை மிகச் சிறப்பாக நடத்துவது குறித்து சிறப்புரையாற்றினார். கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இந்நிகழ்வில்,மாநகர் கல்பனா செந்தில், ஏர்போர்ட் ராஜேந்திரன், ரகு துரைராஜ், சரஸ்வதி புஷ்பராஜ், துரை.செந்தமிழ்ச்செல்வன், அ அக்ரி பாலு,சி. வி.தீபா, ஏ.எஸ்.நடராஜ், ஒருங்கிணைந்த கோவை மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள், அனைத்து பூத் கமிட்டி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.